# சுற்றறிக்கை

2018–19ஆம் கல்வியாண்டில் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களின் நலனில் அக்கரை கொண்டு காலை மற்றும் மாலை நேர சிறப்பு வகுப்புகளும், சனிக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகள் சார்ந்த பாட ஆசிரியர்களால் நடத்தப்பட்டதின் காரணமாக பொரும்பாண்மையான ஆசிரியர்கள் 100 சதவீத தேர்ச்சியினையும் மற்றும் பல ஆசிரியர்கள் 90 சதவீதத்திற்கும் மேலான தேர்ச்சியை அளித்துள்ளார்கள். இதனால் மாவட்டத்தின் தேர்ச்சி சதவீதம் கனிசமாக உயர்ந்துள்ளது. இதற்காக ஒத்துழைப்பு அளித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் மற்றும் தலைமையாசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், வேலூர் மாவட்டத்தில் 2019–20ம் கல்வியாண்டிலும் பொதுத்தேர்வு எழுதவுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சியை கருத்தில் கொண்டும், அரசுப்பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும் பள்ளி வேலை நேரம் தொடங்குவதற்கு முன்பாக காலை 8.45 முதல் 9.25 வரை சிறப்பு தனிவகுப்பும், அதேபோல் மாலை பள்ளி வேலை நேரம் முடிந்தபின் 4.35 முதல் 5.15 வரை தனி சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும்போது கூடுதலாக மாணவர்கள் தேர்ச்சி பெற வாய்ப்புள்ள நிலையில் சிறப்பு வகுப்புகளை திட்டமிடப்பட்டு நடத்த நாள் ஒன்றுக்கு ஒருபாட ஆசிரியர் வீதம் அனைத்து பாட ஆசிரியர்களுக்கும் சுழற்சி முறையில் வாய்ப்பு வழங்க ஏதுவாக (அனைத்து ஆசிரியர்களன் விருப்பப்படி) கால அட்டவணை தயார் செய்து அளித்து, மாணவர்களுக்கு கடினமான பாடங்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தவும், சராசரி மாணவர்களை நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற செய்யவும் எழுத்துப் பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகளை அளிக்குமாறு அனைத்துவகை அரசு/ அரசு நிதியுதவி பெறும் பள்ளி பாட ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சிறப்பு வகுப்புகள் நடைபெறும் விவரத்தினை மாணவர்களின் பெற்றோருக்கு தெரிவித்து சார்ந்த வகுப்பிற்கு மாணவர்கள் தவறாமல் வருகைபுரிவதை உறுதிசெய்தல் வேண்டும்.

மேலும், வார விடுமுறை நாள் (சனிக்கிழமை – 1/2 நாள் மட்டும்) ஆசிரியர்களின் விருப்பத்தின் அடிப்படையில் சுழற்சி முறையில் சிறப்பு தனி வகுப்புகள்பள்ளியில் நடைபெறும் வகையில் பாடம், ஒதுக்கப்பட்டு, கற்றல் மேம்பாடு மற்றும் தேர்ச்சி வீதம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் சிறப்பு வகுப்புகள் அனைத்து பள்ளிகளும் நடைபெறுவதை தலைமையாசிரியர் உறுதி செய்து அறிக்கையை சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலருக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.